# ஆரம்பகால இந்து திருமண சடங்கு முறைக்களுக்கும் தற்கால இந்து திருமண சடங்கு முறைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் (காரைதீவு பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு)

**தயாபரன் விதுர்சிகா**
மொழித்துறை, கலை கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

*t.vithursika1@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** *திருமணம் என்பது திரு, மணம் என பகுக்கப்பட்டு திரு என்பது தெய்வீகத்தன்மை எனவும், மணம் என்பது இணைதல் எனவும் மேன்மையான தெய்வத்தன்மையுடன் இணைதல் என பொருள்படும் மற்றும் திருமணம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்கான சட்ட ரீதியான ஓர் அமைப்பு முறையாகும். ஆரம்பகால இந்து திருமணம் எனும் போது பண்டைத் தமிழர் தம் வாழ்க்கையில் கற்பொழுக்கம், கழவொழுக்கம் என்ற அடியில் பொருள் கொடுத்தும், சேவை செய்தும், மணத்தல் திறமையை வெளிக்காட்டும் வகையில் வீரத்தின் காரணமாக மணத்தல், போர் நிகழ்த்தி மணத்தல், தன் காதல் மிகுதியை காட்டி மணத்தல் போன்ற இவ்வகை திருமண முறைகள் காணப்பட்டன. தற்கால இந்து திருமணம் எனும் போது பாரம்பரியத்திலிருந்து நழுவி இன்றைய அவசரம் நிறைந்த காலத்தில் ஆண், பெண் இருவரும் இணையதளங்களில் பார்த்து அதிலேயே பேசி திருமணம் செய்யும் நாகரிகமான வகையில் காணப்படுகின்றது. இவ்வாறு திருமணத்தை ஆய்வு ரீதியாக ஆராயும் போது ஆரம்ப இந்து திருமண சடங்கு முறைகளுக்கும் தற்கால இந்து திருமண சடங்கு முறைகளுக்கும் இடையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. அத்தோடு ஆரம்ப கால திருமண நடைமுறைகளை வட இந்திய, தென்னிந்திய வரலாற்று காலங்கள் இலக்கியங்கள் வாயிலாக அறிவது அவசியமாகும். தற்கால திருமண நடைமுறைகளை நாம் நேரடியாக காணக்கூடியதாக உள்ளது.*

*திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடைபெறும் ஒப்பந்தம் ஆகும். ஆரம்பகாலம் முதல் தற்காலம் வரை திருமணம் முக்கியப் படுத்தப்பட்டுள்ள ஒரு வாழ்வியல் சடங்காகும். அவற்றை தற்போது நடைமுறைப்படுத்துவதில் பல மாற்றங்கள் நவீனமயமாகி வந்துள்ளன. ஆகவே ஆரம்ப கால திருமண நடைமுறைகளை பின்பற்றி தற்கால திருமண நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நவீனமயப்படுத்தப்பட்ட காலமாக இது விளங்குவதால் திருமண நடைமுறைகள் மற்றும் சடங்குகளில் பல்வேறு மாற்றங்கள் எதிர் நோக்கப்படுகின்றது. அத்தோடு மக்கள் பாரம்பரியத்தை அறியாமல் இருப்பது இவ்வாய்வில் பிரச்சினையாக கருதப்படுகின்றது.*

*திருமண சடங்குகள் தொடர்பாக பல்வேறுபட்ட ஆய்வுகள் இடம்பெற்ற போதிலும் பண்டைய இந்து திருமணச் சடங்குகளுக்கும் தற்கால திருமணச் சடங்குகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றி எந்த ஒரு ஆய்வும் இடம்பெறவில்லை. ஆகவே இவ் ஆய்வு இடைவெளியினைப் பூரணப்படுத்தும் முகமாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*ஆரம்பகால இந்து திருமணச்சடங்குகளுக்கும் தற்கால இந்து திருமணச்சடங்குகளுக்கும் இடையிலான இடைவினைகளே அடையாளம் காணுதல் பிரதான நோக்கமாகவும் ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரை திருமண சடங்குகள் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ள விதம், தற்கால திருமணச் சடங்குகள் ஆரம்ப கால திருமணச் சடங்குகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை இனங்காணல் மற்றும் திருமணங்களில் நவீனத்துவத்தினால் பாரம்பரியங்களை மறந்த நிலை என்பவற்றினை சமூக மக்களுக்கு எடுத்துரைத்தல் துணை நோக்கங்களாகவும் கருதப்படுகின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *திருமணம், சடங்குகள், பண்பாடு, இந்துக்கள், தற்காலம், இல்லறம், பண்டைய வாழ்வியல்*

## 1. அறிமுகம்

சடங்கு என்பது சமயம் அல்லது மரபு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறைகளின் தொகுப்பு சடங்கு ஆகும். மனிதனால் மனித சமூக நலன் கருதி செய்யப்படுகின்ற சடங்கு திருமணமாகும். எவ்வாறாயினும் எக்காரணங்களினால் பின்பற்றப்பட்டதாயினும் திருமணம் என்பது ஓர் சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பத்தை உருவாக்குவதற்கான வழிமுறை என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. ''சமூகத்தின் முதல் உறவு திருமணம்'' என்றார் சிசாரோ.

திருமணம் ஒரு துணை மணம், இரு துணை மணம், குழு மணம் என பல முறைகளில் காணப்படுகின்றது. வேத காலம் தொடக்கம் இன்று வரை பல பெயர்களிலும் திருமணம் நடைபெற்று வந்துள்ளது.

சான்றாக:- காந்தர்வ திருமணம், காதல் திருமணம் என பல முறைகள் உள்ளன.

திருமணம் என்ற ஒன்று எப்போது உருவானது? எப்படி உருவானது? எதற்காக உருவானது? என்ற பல கேள்விகள் வரலாம். அதற்கு வரலாற்றில் பல தரவுகளும் சான்றுகளும் கிடைக்கப் பெற்றாலும் உறுதியாக இந்த ஆண்டின் தான் தொடங்கியது என்று சான்று இல்லை சுமார் 4350 ஆண்டுகள் பழமையானது என இந்து திருமண நடைமுறை நாகரிகம் கூறுகிறது. ஆனால் அதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்க வேண்டும் என்று மானிடவியலாளர்கள் கூறுகின்றார்கள்.

ஆரம்ப கால இந்து திருமண சடங்கு முறைகளில் பொருள் புரியாத வடமொழி மந்திரங்கள் இல்லை புரோகிதர் இல்லை, எரி ஓமம் வளர்த்தல் இல்லை, தீவலம் இல்லை, அருந்ததி காட்டல் இல்லை போன்றவற்றோடு எந்த மூடநம்பிக்கைகளும் ஆட்பட்டு இருக்கவில்லை. ஆனால் தற்காலத்தில் இவை அனைத்தும் காணப்படுகின்றது.

பாரம்பரிய இந்து திருமணத்திலும் தற்கால இந்து திருமணத்திலும் சடங்கு முறைகள் தொடர்பில் சமூகத்தில் மக்கள் மத்தியில் நிலவும் எண்ணங்கள் பல வகைப்பட்ட தாகும் ஆகவே மக்கள் மத்தியில் முறையான நடைமுறை கொடுக்க இவ்வாய்வு முக்கியமானதாகும்

## 2. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வில் ஒப்பிட்டு ஆய்வியல் முறை, விபரணஆய்வு முறை, வரலாற்றியல் ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது ஆரம்ப கால திருமணச் சடங்குகளையும் தற்கால திருமணச்சடங்குகளையும் ஒப்பிட்டு அதன் வேறுபாடுகளை கணிப்பதற்காக ஒப்பிட்டு ஆய்வு முறையும் ஆரம்பகால சடங்கு முறைகளினூடாக தற்காலம் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விபரித்து கொள்வதினால் விபரண ஆய்வு முறையும், காலங்களின் அடிப்படையில் பண்டைய கால சடங்குகளை இனங்காண்பதினால் வரலாற்று ஆய்வு முறையும், பண்டைய மற்றும் தற்கால திருமண சடங்குகளை விளக்குவதற்காக இந்து இலக்கியங்கள், புத்தகங்கள் போன்றவற்றில் உள்ள பல விடயங்கள் ஆராய்ந்து பகுத்துக் கொள்ள பகுப்பாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றது இது ஒரு கள ஆய்வாகும். ஆய்வியல் எல்லையாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. தரவு சேகரிக்கும் முறை

ஆய்வுக்கான தரவுகள் முதல் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் மூலம் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக நேரடியாக நேர்காணல் அவதானம் மூலம் புறப்பட்ட தரவுகள் தொகுக்கப்பட்டு ஆய்வாக முன்மொழியப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளாக திருமணச்சடங்கு முறைகள் குறித்து ஆரம்ப காலத்திலும் தற்காலத்திலும் எழுந்த நூல்கள், ஆக்கங்கள், செய்தி, இணையதளங்களில் உள்ள தகவல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பவற்றை மீண்டும் பகுத்து கூறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.'

### 4. இலக்கிய மீளாய்வு

பண்பாட்டு மானிடவியல் என்ற பக்த வக்சலபாரதி அவர்களின் நூலின் வாயிலாக திருமணம் தொடர்பான கருத்துக்கள் பற்றி அறிய முடிந்தது.

தமிழர் திருமண நடைமுறைகள் (முதற்பாகம்) என்ற சண்முகதாஸ் அவர்களின் நூல் வாயிலாக பண்டைய மட்டும் தற்கால திருமண நடைமுறைகளை அறிய முடிந்தது.

திருமண பந்தத்தில் கணவன் மனைவி என்ற கலையரசன் என்பவரின் நூலில் ஊடாக திருமணங்களின் நோக்கங்களை அறியக் கூடியதாக இருந்தது.

கல்யாண வைபோகம் என்ற மயூரகிரிக்குருக்களின் நூலினூடாக திருமணத்தின் நவீனத்துவமான மாற்றங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

காரைதீவு பிரதேசத்தில் நேர்காணல் மூலம் பெரியவர்களிடமிருந்து தற்கால நடைமுறைகளை கேட்டு அறிந்து கொள்ள முடிந்தது.

### 5. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

**பாரம்பரிய மற்றும் தற்கால இந்து திருமண சடங்கு முறைகள் நடைமுறைகள்**

ஒரு மனிதனாக பிறந்தவனுடைய வாழ்வில் சடங்குகள் மிகவும் இன்றியமையாததாகும். இச்சடங்குகளில் ஒன்றான திருமணம் தர்மத்திற்கான சிறந்த பாதையாக நம் முன்னோர்களால் குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. இதனை

**“ப்ரஜா தத்தும் மாவ்யச் சேத்ஸி:**
**தர்மாந் தப்ரமதிதவ்யம்”** **(நீர்வை தியாக. மயூரகிரிக் குருக்கள், 2015)** என சான்று பகிர்கின்றது.

ஆரம்ப காலத்தில் இருந்தே திருமண நடைமுறைகளும், சடங்கு முறைகளும் நடைபெற்றே வந்து இருக்கின்றன. இந்து சமயத்தின் முதல் நூலான வேத இலக்கியங்களில் திருமண வகைகள் அவற்றின் சடங்கு முறைகள் பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளன. அவ்வாறு வேதகால எண் வகை திருமணங்களாக பிரம்மம், தைவம், ஆரிடம், ப்ரஜா பத்யம், அஸுரம், காந்தர்வம், ராட்சசம், தைவம், பைசாசம் என்பன காணப்படுகின்றன.

சங்ககாலத்தினை நோக்கின் தலைவியை கூடிப்பிரிந்த தலைவன் மீண்டும் வந்து தலைவியை சேராது மாறுபட்டு நிற்கவும் இதனை நிவர்த்தி செய்யும் முகமாக சடங்குகளுடன் கூடிய திருமணத்திற்கான தேவை ஏற்பட்டது. இதனை தொல்காப்பிய பொருளதிகாரம் கற்பியல்,

**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்திரை கரணம் என்ப..”** **(ம. இரகுநாதன், 2009)**

எனக் கூறுவதனால் சங்ககால அக வாழ்க்கை முறையில் ஏற்பட்ட தவறுகளை கருத்தில் கொண்டே கரணத்துடன் கூடிய திருமண முறை உருவாகி உள்ளது என்பது தெளிவாகின்றது. இவ்வாறு தோன்றிய திருமணச் சடங்கு முறைகளின் ஊடாக பாரம்பரியகாலம் மற்றும் காரைதீவு பிரதேசத்தின் தற்கால திருமண சடங்கு முறைகளுக்கும் இடையில் வேறுபாடுகளை ஆராய்ந்து குறிப்பிடலாம்.

**மணமகள் மணமகன் ஜாதக பொருத்தம் பார்த்தல்**

திருமணச் சடங்கின் முதல் நடைமுறை பொருத்தம் பார்த்தல் காணப்படுகின்றது. ஆனால் ஆரம்ப காலத்தில் பொருத்தம் பார்த்தல் என்ற ஒரு சடங்கு இருக்க வாய்ப்பே கிடையாது. இதனை பல்லவர் கால இலக்கியமான ஆண்டாள் பாடிய திருவாய் மொழியில் - ஆண்டாள் தனக்கும் கண்ணனுக்கும் திருமணம் நடைபெற்றதாக கனாக்காண்பதையும் அவர் மீது கொண்ட காதலையும் வைத்து அக்கால திருமண சடங்குகளில் ஜாதகம் பார்த்து திருமணம் செய்யும் வழக்கம் இருந்திருக்க முடியாது என குறிப்பிடலாம்.

ஆனால் தற்காலத்தில் இந்து திருமண சடங்கு முறைகளில் முக்கியமான சடங்காக பொருத்தம் பார்த்தல் காணப்படுகின்றது. சான்றாக தற்போதைய விவாக பொருத்தத்தில் முக்கியமாக பத்து பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றது. மதத்தில் உயர்ந்தவரா?, தாழ்ந்தவரா? என்றும் மற்றும் திருமணப் பொருத்தம், நட்சத்திர பொருத்தம், கணப் பொருத்தம், இராசி பொருத்தம், வசியப் பொருத்தம், இரச்சுப் பொருத்தம், யோனி பொருத்தம், ஆயுள் பொருத்தம் என்று பல வகையில் ஜாதகங்கள் கண்டறியப்பட்டு திருமணம் நடைபெறுகின்றது. மற்றும் ஹோத்திரம், சாதி பார்த்து திருமணம் செய்து வைக்கும் முறை காணப்படுகின்றது. மதம் என்ற ஒரு பிரிவு பார்ப்பதே தவறான செயல். அதிலும் ஒரே மதத்தினுள் சாதி வேறுபாடு பார்ப்பது தவறிலும் தவறு தற்காலத்தில் ஒரு வண்ணான் சாதியைச் சேர்ந்த ஒருவர் எவ்வளவு உயர்வான நிலையில் இருந்தாலும் அவர் வண்ணான் சாதிய சேர்ந்தவரையே திருமணம் செய்ய வேண்டும் மாறாக ஒரு பிராமண குலத்தைச் சேர்ந்தவரை திருமணம் செய்தால் தவறாகும். இவ்வாறு செய்தால் இவர்களை குடும்பத்திலிருந்து விலக்கியும் வைப்பர். குறித்த காரைதீவு பிரதேசத்தில் இவ்வாறான சடங்குகளையும் அதனால் ஏற்படும் தாற்பரியங்களையும் நேர்காணல் மூலம் அவதானித்த விடயங்களாக குறிப்பிடலாம்..

**திருமணமும் அலங்காரமும்**

தமிழர் திருமண நடைமுறைகள் அழகுணர்வோடு காணப்படுவதற்காக அலங்கார சடங்குகளும் இடம்பெறுகின்றன. பண்டைய இந்து திருமண சடங்கு முறையில் திருமணம் நிகழும் இடத்தை பிரத்தியேகமான அலங்காரப் பந்தல் அமைத்து வெண் மணல் பரவி விளக்குகள் ஏற்றி அலங்காரம் செய்யப்பட்டது. சங்ககாலத்திலே திருமண நடைபெறும் இல்லம் மலைச்சாரல், மலைபடுகடாமிலே என உவமிக்கப்பட்டும் இருந்தது இயற்கையான மழைக்காட்சி ‘மழைப்பட்டன்ன மன்னன் மலிபந்தர’ என்றும் அழகாக காணப்பட்டது. திருமணத்திற்காக வீட்டை அழகு செய்து சுற்றத்தார் கூடி விழாவாக திருமண நடைபெறுவதை அகநானூறு 369வது பாடல்

**“கெடலரு நல்லிசை உறந்தையன்ன தீகியுடை நன்னாகப் புதுவது புணந்து வந்து…”**
**(அ. சண்முகதாஸ், 1984) என**
குறிப்பிடுகின்றது. பெண்ணையும் ஆணையும் அலங்கரிக்கும் சடங்குகளும் இயற்கையான பொருட்களை பயன்படுத்தி எளிமையான முறையிலும் திருமணச்சடங்கு இடம்பெற்று இருந்தது. தற்கால திருமணச்சடங்குகளில் திருமண மேடை அமைக்கும் சடங்கும் காணப்படுகின்றது. திருமண வைபவம் நிகழ்ந்த என மண்டபங்கள் வாடகை பணங்களுக்குப் பெறப்பட்டு மணமேடை அலங்காரம் செய்பவரை அழைத்து மேடைகள் அலங்கரிக்கப்படும். மின்விசிறி வசதிகள் என்பனவும் அங்கு காணப்படும் அது மட்டுமல்லாது பெண்கள் முக வர்ணனை, கூந்தல் வர்ணனை என்பன அதிக பணங்கள் முகவர்ணனை செய்பவரிடம் கொடுக்கப்பட்டு அலங்காரங்கள் மேற்கொள்ளப்படும். தற்காலத்தில் திருமணம் அலங்காரம் என்றாலே செயற்கையான அலங்காரங்களாகவே காணப்படுகின்றன.

சான்றாக: காரைதீவு மதுமிலா முகவர்ணனை நிலையம்
காரைதீவு கபிர்தாஸ் மேடை அலங்காரம் போன்ற நிலையங்களை குறிப்பிடலாம்.

**சிலம்பு களி சடங்கு**

சங்ககாலத்தில் திருமணமாகாத பெண்கள் சிலம்பு அணிந்திருக்க வேண்டும் என்றும் திருமணமாகியதும் அதனை கழட்டியிருக்க வேண்டும் எனவும் நடைமுறையாக இருந்தது இதனை சிலம்பு கழிஇ சடங்கு என அழைத்தனர்.

**ததரல் வாய்ச்**
**சிலம்பு கழிய இய செல்வம்**
**பிறகுணக் கழ்ந்த என் ஆயினும் அழ்யே”**
**(அ. சண்முகதாஸ், 1984)**
என நற்றினை பாடல் ஒன்று இச்சடங்கு பற்றி சான்று பகிர்கின்றது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியும், பாண்டிமாதேவியும் காற்சிலம்பு திருமணத்திற்கு பின் அணிந்த நடைமுறைகளும் காணப்படுகின்றன. ஆனால் தற்காலத்தில் திருமணமாகிய பெண்கள் திருமணமாகாத பெண்கள் கால்களில் சிலம்பு அதாவது கொலுசு காண்பது கூட

அரிதாகும். தற்போது திருமணம் நிகழ்வின் போது அம்மி மிதித்தல் சடங்கு எனும் ஒன்றும் மேற்கொள்ளப்படுகின்றது. அச்சந்தர்ப்பத்தில் பெண்களின் காலை ஆண் அம்மியில் தூக்கி வைத்து மெட்டி போடும் நிகழ்வுக்காக மட்டும் சில பெண்கள் கால்கள் அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக கொலுசினை அணிகின்றார்கள். இப் பாரம்பரிய சடங்கு முறையான சிலம்பு கழிஇ எனும் சடங்கினை குறித்த ஆய்வு பிரதேசத்தில் காண்பது அரிதாகும்.

**காப்பு நாண் அணிவிக்கும் சடங்கு**

பாரம்பரிய இந்து திருமணத்தில் காப்பு நாண் அணிவிக்கும் சடங்கு காணப்பட்டுள்ளது. சான்றாக சுந்தரர் திருமணத்தின் முதல் நாள் காப்பு நாண் கட்டிய விவரத்தினை தடுத்தான் கொண்ட புராணத்திலே காணக்கூடியதாக உள்ளது.

''பைம்பொன் நான் காப்புச் சேர்ந்தனன்……'' என வரும் பாடல் அடி விளக்குகின்றது. தற்கால திருமண சடங்குகளில் காப்பு அணிவிக்கும் சடங்கு என்ற மரபு காணப்படுகின்றது. ஆனால் திருமண நடைமுறையில் இச்சடங்கு குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுவதில்லை.

**நகர்வலம் வரல்**

பண்டைய திருமண சடங்குகளில் ஒன்றாக நகர் வலம் வரல் காணப்படுகின்றது. இதற்கு சான்றாக

**"சொரிந்தனர் மலர் மாலை சுண்ணம் துவினர்**
**விரிந்தொழித் காசுபொன் தூது விசினர் பரிந்தனர்…" (நீ. மயூரகிரிக்குருக்கள், 2015)**

என கம்பராமாயணத்தில் மணக் கோலம் பூண்ட இராமன் தேரில் நகர்வலம் வருகின்றமை கூறப்பட்டு இருக்கின்றது. சுபநாளாக கருதப்படும் இத்திருநாளிலே இராமன் தானம் வழங்கிய செய்திகளும் கூறப்படுகின்றது. நகர்வலம் தொடங்க முன் ராமன் பசு, பொன், நிலம், மணி ஆகியவற்றை தானமாக வழங்கினான். தற்கால இந்து திருமணங்களில் நகர்வலம் வரல் எனும் ஒரு சடங்கு மரபில் உள்ளது ஆனால் நவீனமயமாகிய காலம் தற்காலம் என்பதனால் மணமகள் மணமகன் இருவரும் அவரவர் வீட்டில் இருந்து வாகனங்களில் திருமணம் இடம்பெறும் மண்டபத்துக்கு செல்லும் நடைமுறை குறித்த ஆய்வு பிரதேசத்தில் காணக்கூடியதாக உள்ளது.

**தாலி அணிவிக்கும் சடங்கு**

பண்டைய இந்து திருமணச் சடங்குகளில் தாலி கட்டப்படும் மரபு காணப்படவில்லை. சங்க காலங்களில் ''பொன்னுடைத் தாலி யென் மகன்'' என தாலி பற்றிய செய்து காணப்படுகின்றது. ஆனால் திருமணத்தின் போது தாலி அணிந்ததாக கூறப்படவில்லை மாறாக திருமணத்தின் போது மணமகன் மணமகளுக்கு மலர் மாலைகளை அணிந்ததாகவே சொல்லப்படுகின்றது.

தற்கால இந்து திருமணச் சடங்குகளில் தாலி அணிதல் என்னும் நடைமுறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தாலி கட்டும் மரபு இடைப்பட்ட காலத்தில் வந்த ஒரு நிகழ்வாகும். பிற்பட்ட காலத்தில் எழுந்த இலக்கியமான கந்தபுராணம் இதனை சான்று பகிர்கின்றது. ''பிரமதேவர் ஒரு திருமங்கல்ய சூத்திரத்தைப் படைத்து தர அதனை தனது திருக்கரத்தால் வாங்கி தெய்வானையம்மையாருடைய திருக்கழுத்தில் தரித்து'' என்று மணமகனாகிய முருகப்பெருமான் மணமகளாகிய தெய்வானையார் கழுத்திலே தாலி கட்டிய செய்தி கூறப்படுகிறது. பண்டைய காலத்தில் மஞ்சள் கிழங்கால் ஆன தாலி கட்டப்பட்டுள்ள செய்தியும் காணப்படுகின்றது.

ஆனால் குறித்த ஆய்வு பிரதேசத்தில் பொன்னாலான தாலி விலைமதிக்கக் கூடிய அளவில் மணமகனால் மணமகள் கழுத்தில் போடப்படுகின்றமை மிக முக்கிய சடங்காக காணப்படுகின்றது. காரைதீவு பிரதேசத்தில் சகல திருமணங்களும் இவ்வாறே நடைபெறுகின்றது.

**தாரை வார்த்துக் கொடுத்தல்**

பாரம்பரிய திருமண முறைகளில் தாரை வார்த்து கொடுக்கும் சடங்கானது இருந்தமைக்கு முக்கியமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. சனகர் தனது மகளான சீதையை ராமனுக்கு தாரை வார்த்து கொடுத்தது பற்றி கம்பர்,

''கோமகன் முன் சானகன் குளிர் ரல நீர்….'' என வரும் பாடல் சான்று பகிர்கின்றது. இச் சடங்கு நிகழ்வதன் முக்கிய நோக்கம் தனது மகள் என்ற உரிமையை பெற்றோர் விட்டு மணமகனின் மனைவி என ஒப்படைப்பதாகும் தற்காலத் திருமண சடங்குகளிலும் தாரை வார்த்து கொடுத்தல் சடங்கானது காணப்படுகிறது ஆனால் இதனுடைய முக்கிய நோக்கமாக அழகு பார்ப்பது என்பது குறித்த ஆய்வு பிரதேசத்தில் காணப்படுகின்றது.

**அருந்ததி பார்த்தல்**

திருமணம் நடைமுறைகளில அருந்ததி பார்க்கும் சடங்கு முக்கியமானதாக காணப்படுகிறது. இதனைபாரம்பரிய காலத்தில் நோக்கின் ''…. வானத்து சாலியொரு மீன் நனலிலை….'' என வரும் பாடலினூடாக சிலப்பதிகாரத்தில் கண்ணகியினுடைய திருமணத்தில் இச்சடங்கு நடைபெற்றமை விளக்கப்பட்டுள்ளது. அருந்ததி காட்டுவதன் நோக்கம் வானில் அருந்தி எனும் நட்சத்திரமும் அவரது கணவரான வசிட்ட நட்சத்திரமும் அருகில் இருந்தாலும் கண்களுக்கு ஒன்றாகவே தெரிவது போல கணவன் மனைவி இருவரது மனமும் ஒன்றிணைந்து காணப்பட வேண்டும் என்பதாகும். தற்கால திருமணத்திலும் அருந்ததி காட்டப்படும் ஆனால் வானில் நட்சத்திரங்கள் தோன்றாமலேயே ஒரு சடங்கு என்ற பெயருக்காகவும் அத்துடன் புகைப்படம் எடுப்பதற்காகவும் மட்டும் நடைபெற்று வருவதனை காரைதீவு பிரதேசத்தில் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது

**வாழ்த்துச் சொல்லும் சடங்கு**

பாரம்பரிய திருமண சடங்குகளில் திருமணம் நிறைவேறிய கையுடன் மணமக்கள் இருவரையும் வாழ்த்து தெரிவித்து மகிழ்விக்கவே ஒரு கூட்டம் காத்துக்கொண்டிருக்கும் சான்றாக சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி திருமண சடங்கில் ஒரு முக்கியமான திருமண சடங்காக மணமக்களை வாழ்த்தும் சடங்கு இருந்தமையை இளங்கோ அடிகள்

**"போகொடு விரிகுட்டகப் பெயர் நறுங்குடி அண்ணார்**
**காதலாற் பிரியாமல் கவுக்கை நெகிழால் தீது அருக**
**என ஏக்கி தின்மலர் கொடு தூவி…" (கலையரசன்., 2003),**

என கொடி போன்ற பெண்கள் காதலனை பிரியாமல் தீமைகள் அனைத்தும் ஒழிந்து இன்புற்று வாழ்க! என மலர்கள் தூவி கண்ணகியை வாழ்த்தியமையை காணலாம். இச்சடங்கினை தற்காலத்தில் காரைதீவு பிரதேசத்தோடு ஒப்பிட்டு பார்க்கும்போது தற்போது நவீனமயமாக்கத்துக்கு ஏற்ப ஆங்கிலத்தில் வாழ்த்து தெரிவித்து செல்வதோடு மணமகன் மணமகள் அருகில் நின்று புகைப்படங்கள் எடுப்பதற்காகவே ஒரு கூட்டம் காத்துக் கொண்டிருக்கும்.

**காரைதீவு பிரதேசத்தின் தற்காலத் திருமணச் சடங்கின் நவீனத்துவம்**

தற்காலத்தில் திருமணங்கள் பணபலத்தை, அதிகாரத்தை, ஆடம்பரத்தை காண்பிக்கும் சடங்காக திருமண சடங்குகள் மாறிவிட்டன. ஆடம்பரத்தில் ஒருவரை ஒருவர் மிஞ்ச வேண்டும் என எண்ணி திருமணங்களை நடத்துகின்றனர். இதனால் ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள் திருமண விழாக்களை நடத்தவே அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ளது. பாரம்பரிய காலத்தில் திருமண சடங்குகளின் புகைப்படங்கள் என்றால் தெரியாத நிலை இருந்திருக்கும் ஆனால் அங்கு அவர்களின் உற்றார் உறவினர்கள் திரளாக வந்து இருந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கி இருந்தோ மனம் விட்டு பேசி புதிய உறவுகளை புதுப்பித்து இருப்பார்கள். ஆனால் தற்போதைய திருமணத்தில் சடங்குகள் சில மணி நேர விவகாரமாய் போய்விட்டது. அந்த சில மணி நேர நிகழ்வுக்காக வீண் ஆடம்பரங்கள் நவீனமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

உதாரணம்:- பணங்கள் அதிகமாக கொடுத்து புகைப்பட கலைஞர்களை வரவழைத்தல். இசைக்கச்சேரிகள் நடத்துதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

காரைதீவு பிரதேசத்தில் தற்கால திருமண சடங்குகளில் மேற்கத்தயவரின் பண்பாடுகள் ஊடுருவி உள்ளதை குறிப்பிடலாம். சான்றாக மருதாணி வைக்கும் சடங்கு காணப்படுகின்றது இச்சடங்கில் மணப்பெண் தோழியர்கள் அனைவரும் கலந்து மருதாணி வைத்து விதவிதமாய் புகைப்படங்களை எடுக்கும் நவீனமான ஒரு காலமாக இது காணப்படுகின்றது.

### 6. முடிவுரை:-

திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ போகின்ற இல் வாழ்வின் ஆரம்ப நிலையாகும். ஆரம்ப நிகழ்ச்சி என்று கூறுவதனால் இது ஒரு சடங்கு சம்பிரதாயங்களுடன் கூடிய ஒரு வகை ஒரு வைபகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாரம்பரிய காலமான வேத காலத்தில் திருமணம் புனித தன்மையானது இன்னாருக்கு இன்னார் என பிரமனால் நிச்சயிக்கப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது. தற்காலத்தில் திருமணமா? அது ஒரு சிறைத் தண்டனை திருமணம் ஆனவர் சிறைக் கைதி தான் என்ற விளையாட்டு பேச்சுக்களினால் திருமணம் என்பது கேலி பேச்சாக சென்றுவிட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆகவே ஆரம்ப கால திருமணச் சடங்குகள் அன்பு, பாசம், அழகு, ஒழுக்கம், கவனிப்பு, நல்விருந்து என்ற ஒரு அளவான, எளிமையான, பொருள்கள் நிறைந்த, கண்ணியமான வகையில் இடம்பெறுகின்றது. தற்கால திருமணச் சடங்கு பணம், பதவி, சொத்து, ஆசை, அதிகாரம், போலியான கிரியைகள், நவீன புகைப்படங்கள் என்ற நாகரீகமான போக்கில் பொருளற்ற வீண் விரயமான அர்த்தமில்லாத வகையில் இடம் பெற்று வருகின்றது. பாரம்பரிய திருமணச்சடங்குகளில் இன்றைய திருமணங்களில் உள்ள பொருள் புரியாத வடமொழி மந்திரங்கள் இல்லை, புரோகிதர் இல்லை, தீ வலம் வரல் இல்லை, அம்மி மிதிப்பதில்லை, கோத்திரம் கூறல் இல்லை ஆனாலும் மிகவும் அழகான முறையில் ஒரு வரண் முறைக்குள் திருமணங்கள் நடைபெற்று இருக்கின்றது. ஆனால் குறித்த பிரதேசத்தில் தற்கால திருமண சடங்குகளில் மிகுதியான சடங்குகள் இருக்கின்ற போதிலும் அதனை கடைப்பிடித்து வாழ்பவர்கள் அரிதாகவே உள்ளனர். அதாவது காட்டுமிராண்டிகளாக காடு மேடெல்லாம் அலைந்து திரிந்த காலத்தில் ஆணும் பெண்ணும் தமது பாலியல் தேவைகளுக்காக இணைந்து பிரிவதும் காணப்பட்டமை சடங்குகள் தோற்றம் பெற முன்னுள்ள பூர்வீக காலத்தில் ஆகும். அதே விடயத்தை மக்கள் தற்போது பரவலாக செய்து வருகின்றனர்.

ஆகவே இவ்வாறான தவறான விடயங்களில் இருந்து மீள நம் முன்னோர்கள் நமக்கு சடங்கு முறைகளை தந்துள்ளார்கள். அவற்றுள் திருமண சடங்கின் நடைமுறைகள் பல. அவற்றை விதிப்படி செய்து பாரம்பரிய கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும். ஆரம்ப கால திருமணச் சடங்கு முறைகள் அறவழியில் இல்லற வாழ்க்கையை நடத்தவும், ஒரு முக்திக்கான வழியாகவும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தற்காலத் திருமணச் சடங்கு முறைகள் தங்களது பணப்பலத்தை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தும் பண்டமாற்று அல்லது வியாபார முறையாக குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்றது. ஆரம்ப கால திருமண சடங்கு முறைகள் தற்கால திருமண சடங்கு முறைகள் எல்லாமே இரு மனதை இணைய வைக்க நடைபெறும் சடங்குகள் ஆகும். எது எவ்வாறோ இவற்றைத் தொகுத்துக் கூறும் பொழுது பாரம்பரிய இந்து திருமண சடங்குகளுக்கும் காரைதீவு பிரதேசத்தின் தற்கால திருமணச் சடங்குகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் மேல் குறிப்பிட்ட பண்டைய மற்றும் தற்கால சடங்குகள் மற்றும் நடைமுறைகள், தற்காலத் திருமண நவீனத்துவம் என்றவற்றின் ஊடாக அவை வெளிப்படுத்தப்பட்டு உள்ளன. எனவே இனி வரும் காலங்களில் பாரம்பரிய திருமண நடைமுறைகளுக்கு ஏற்ப தற்காலத்தில் திருமணம் நடைபெற வேண்டும் என்பது கட்டாயமான ஒன்றாகும்.

**உசாத்துணைகள்**

1. இரகுநாதன் ,ம. (2009). பண்டைத் தமிழரின் பண்பாட்டு தடங்கள்.
2. கந்தசாமி ஆச்சாரியர், இ.சி. (1973). *தமிழ் மணமும் தாலியும்.*
3. கலையரசன். (2003). *திருமணம் பந்தத்தின் கணவன் மனைவி.* இறக்காமம். மறுமலர்ச்சி ஒன்றியம்.
4. சசிவல்லி ,வி.சி. (2003). *தமிழர் திருமணம்.* உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை.
5. சண்முகதாஸ், அ. (1986). *தமிழர் திருமண நடைமுறைகள்.* முத்தமிழ் வெளியீட்டு கழகம். யாழ்ப்பாணம்.
6. சுபராஜ், ந. (2014). *அம்பாறை மாவட்டத்தின் தமிழர் தாலியின் பங்கு.* கலை கலாசார பீடம் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.
7. மயூர கிரிக்குருக்கள், நீ.தி. (2015). *நடராஸ சர்மா - மது வந்தி தம்பதியினரின் விவாக வைபவ சிறப்பு.*
8. ஷியாமளாநவம், (2006). *கல்யாணம்* நவம் வெளியீடு. கனடா.

**அடிக்குறிப்பு**

1. சண்முகதாஸ், அ., (1986), தமிழர் திருமண நடைமுறைகள்.
2. கலையரசன் , (2003), திருமணம் பந்தத்தின் கணவன் மனைவி.
3. மயூர கிரிக்குருக்கள், நீ.தி. (2015), நடராஜ சர்மா - மது வந்தி தம்பதியினரின் விவாக வைபவ சிறப்பு
4. இரகுநாதன்,ம. (2009) பண்டைத் தமிழரின் பண்பாட்டு தடங்கள்.

**நேர் கண்டவர்களின் விபரம்**

- ✓ சண்முகலிங்கம், க. 24.12.2022, (8.30 Am அதிகாலை)
- ✓ தயானந்தர், இ. 29.12.2022, (04.00 Pm மாலை நேரம்)
- ✓ ரகுநாததையா (குருக்கள்), ர. 03.01.2023 (4:30 Pm மாலை நேரம்)